REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 1உ சனி (16—11—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 2உ ஞாயிறு (17—11—57) [இதழ் 133

சேரிகள் எண்ணிக்கை: வளர விடாதீரென மத்திய சர்க்கார் தாக்கீது!

சென்னை, நவ. 15—

நகரப்புறங்களில் 'சேரி'கள் மேலும் பரவிவிடாமல் பார்த்துக் கொள்ளும் பொருட்டு, நகரசபை துணை விதிகளை கடுமையாக அமுல்நடத்துவதற்கான நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று மத்திய வீட்டு வசதி—வினியோக இலாகா, மாநில அரசுகளுக்கு ஓர் சுற்றறிக்கை விடுத்துள்ளதாம்!

சொந்த நாட்டவர்க்கு வாழ்வுதர முடியாத அவலநிலை

தென்னகத்தைவிட்டு ஓடுவோர் தொகை ஆண்டுதோறும் அதிகரிக்கிறது

இலங்கையிலிருந்து தமிழர் பெரும் அளவில் துரத்தப்படுவதேன்?

'கள்ளத்தோணி'களே காரணம் என்கிறார் டெல்லி மந்திரி

புதுடில்லி, நவ. 14—

இலங்கையிலிருந்து துரத்தப்படுகிறவர்களின் எண்ணிக்கை நாளும் அதிகரித்துவருகிறதாம்!

இந்தத் தகவலை மக்கள்சபையில் தந்த வெளிவிவகார இலாகா உதவி மந்திரி இலட்சுமி மேனன், இந்த நிலைக்குக் காரணமும் கூறியிருக்கிறார்.

இந்தியாவிலிருந்து (அதாவது தென்னாட்டிலிருந்து) திருட்டுத்தனமாக (அதாவது கள்ளத்தோணி மூலம்) இலங்கைக்கு ஓடுகிறவர்களின் எண்ணிக்கை சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகரித்துள்ளதாம்!

மேலும், தற்காலிக 'பெர்மிட்டு'கள் வைத்திருப்போர், குறித்த காலத்திற்கு மேல் தங்குவதைத் தடுக்க இலங்கை சர்க்கார் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனராம்!

இதன் காரணமாகத்தான்—அதாவது, 'கள்ளத்தோணி'கள் அதிகரித்திருப்பதினாலும், இலங்கை சர்க்கார் கெடுபிடியினாலும்தான் அங்கிருந்து துரத்தப் படுகிறவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறதென அந்த மத்திய மந்திரி கூறியிருக்கிறார்.

கள்ளத்தோணிகள் அதிகரிப்பு என்ற சோகச் செய்தி, சொந்தநாட்டார்க்கு வாழ்வு தர முடியாத தென்னகத்தின் அவல நிலையைத்தானே சொல்லுகின்றது?

பிரிட்டன் தயாரிக்காதாம்!

செயற்கைச் சந்திரனைத் தயாரித்துப் பறக்க விடும் வேலையில் பிரிட்டன் ஈடுபடாது என்றும், இதைத் தயாரிப்பதால் செலவு அதிகமாகி பலன் எதுவுமில்லாமல் போகக்கூடுமென்றும், பிரிட்டிஷ் தலைமையமைச்சர் மாக்மில்லன் தெரிவித்துள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★

பி. டி. இராசன் வெற்றி

மேல்சபை தேர்தல் முடிவு

சென்னை, நவ. 16—

சென்னை மேல்(சட்ட)சபைக்கு ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு இன்று காலை நடைபெற்றது.

காங்கிரஸ் சார்பாக ஐவரும், திரு. பி. டி. இராசன், திரு. மாரிசாமி ஆக ஏழு பேர் போட்டியிட்டனர்.

நமது கழக ஆதரவுபெற்ற தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்கள், ஐவரில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★★★★★★★★★★★★★★★★★

மூன்றாண்டுகளில் சிறு தொழில் வளர்ச்சி

கூட்டுறவுச் சங்கங்களே துவக்கப்பட்டுள்ளனவாம்

சென்னை, நவ. 15—

1953—1954 முதல் இதுவரையில் சிறு தொழில் கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே துவக்குவதற்கு அனுமதிதரப்பட்டுள்ளதென்றும், மொத்தம் ரூ. 5,780 முதலீடு பங்காக வசூலிக்கப்பட்டுள்ளதென்றும் தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

நமது திட்டங்களுக்கு மத்திய சர்க்காரை எதிர்பார்க்கும் நிலை ஏன்?

சிறுவிவகாரங்களிலும் டெல்லியின் தலையீடு எதற்கு?

நிதி உறவுகள் அலங்கோலமாயிருக்கின்றனவே!

மேல்(சட்ட)சபையில் டாக்டர் ஜான் கண்டனம்

சென்னை, நவ. 15—

"தனது திட்டங்களுக்கு நிதி பெற மத்திய சர்க்காரை நம்பிக் கொண்டிருக்கும் நிலை இந்த மாநில சர்க்காருக்கு இருக்கக்கூடாது" என்று, மேல்(சட்ட)சபை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் டாக்டர் வி. கே. ஜான் குறிப்பிட்டார்.

உபமானியக் கோரிக்கையின் விவாதத்தில் பேசிய அவர்,

"மத்திய சர்க்கார் இந்த மாநில சர்க்காரைப் பொறுத்த சின்னஞ்சிறு விஷயங்களில்கூட தலையிடுவதும், மாநில—மத்திய சர்க்கார்களுக்கிடையில் நிதி உறவுகள் அலங்கோலமாயிருப்பதும் ஒழிய வேண்டும்"

என்றும் வற்புறுத்தியிருக்கிறார்.

விவாதத்திற்குப் பதிலளித்த மந்திரி வெங்கட்ராமன், டாக்டர் வி. கே. ஜான் அவர்களின் பேச்சினைக் குறிப்பிட்டு, 'அத்தனையும் பொய்' என ஒரேயடியாக மறுத்துரைத்தாராம்!

'மாநில—மத்திய சர்க்காருக்கு இடையில் தகராறு எதுவும் இல்லை' என்றும், 'நிதி உறவுகள் அலங்கோலமாயில்லை' என்றும் அமைச்சர் கூறினாராம்!

'மத்திய சர்க்கார் தங்கள் விவகாரங்களில் தலையிடுவது இல்லை' என்றும் அவர் கூறினாராம்!

'ஏமாற்றமே! எதிர்பார்த்த அளவில்லை'

'பற்றுக்குறை நீங்க வழிசெய்யாது'

இரண்டாம் நிதிக் குழுவின் சிபாரிசுகள் பற்றி தென் மாநில நிதி அமைச்சர்கள் கருத்து

சென்னை, நவ. 15—

"இரண்டாவது நிதிக் கமிஷன் சிபாரிசுகள் தென் மாநிலங்கள் பலவற்றிற்கும் ஏமாற்றத்தையே தந்திருக்கின்றன. எதிர்பார்த்த அளவு, மத்திய வரிகளில் பங்கு கிடைக்க வில்லை" என, சென்னை—கேரளம்—ஆந்திர நிதியமைச்சர்கள் கருத்தறிவித்திருக்கின்றனர்.

சி. சுப்பிரமணியம்:

"சிபாரிசுகள் மூலம் சென்னைக்கு மேலும் ரூ. 2 கோடி மட்டுமே வருமானம் கிடைக்கும். இது, எதிர்பாத்த அளவில், கோரிய அளவில் 50 சத விகிதம்தான்; எனவே, அந்த அளவுக்கு சிபாரிசுகள் ஏமாற்றத்தையே தருகின்றன"

என்று, சென்னை நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம், பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

அச்சுதமேனன்:

"சிபாரிசுகளை நாங்கள் எதிர்பார்த்ததைவிடக் குறைவானவையாகும்"

என்று, கேரள நிதி மந்திரி சி. அச்சுதமேனன், திருவனந்தபுரத்தில் தெரிவித்துள்ளார்.

கோபால ரெட்டி:

"சிபாரிசுகள் மூலம் கிடைக்கும் தொகை, மாநிலத்தின் பற்றுக்குறையைப் போக்க உதவாது; சிபாரிசுக்குப் பின்னரும், திட்டத்திற்கு நிதி தேடுவது, சிக்கலான-நெருக்கடியான, பிரச்சினையாகவே இருக்கும். சிபாரிசுகளை, ஏமாற்றம் தருவன என்று கூறுவிடினும், எதிர்பார்த்த அளவு இல்லை என்றுதான் கூறவேண்டியுள்ளது"

என்று, ஆந்திர நிதிமந்திரி பி. கோபால ரெட்டியார், ஐதராபாத்தில் கூறியுள்ளார்.

இரயில்வே ஊழியருக்கும் பென்ஷன் திட்டம்

புதுடில்லி, நவ. 15—

இரயில்வே ஊழியர்களுக்கும் ஓய்வுகால ஊதியம் (பென்ஷன்) அளிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

1957 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 'இந்த 'பென்ஷன்' திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்றும், இன்னும் இரண்டொரு வாரத்தில் இது சம்பந்தமான உத்தரவுகள் பிறப்பிக்கப்படுமென்றும் இரயில்வே உதவி அமைச்சர் ஷாநவாஸ்கான் மக்கள் சபையில் அறிவித்தார்.

மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்த்தல்

மத்திய சர்க்கார் குறுக்கிடாதாம்

புதுடில்லி, நவ. 15—

"மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களை அனுமதிக்கும் விஷயத்தில் மாநில அரசாங்கம் கடைப்பிடிக்கும் வகுப்புக் கட்டுப்பாடுகள் சம்பந்தமாகத் தலையிடுவது மத்தியசர்க்காரின் கொள்கையல்ல"

என்று மக்கள் சபையில் சுகாதார அமைச்சர் கர்மார்க்கர் கேள்வி நேரத்தில் கூறினார்.

"சென்னை மருத்துவக் கல்லூரியில் கேரள மாணவர்களுக்கென சில இடங்களை ஒதுக்குவதை நிறுத்திவிட்டதை ஆட்சேபித்து கேரள மாநில அரசாங்கம் முறையிட்டுக்கொண்டுள்ளதா?" என்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, "சில தகவல்கள் கிடைத்துள்ளன; ஆனால், இதை நாங்கள் சென்னை சர்க்காரின் நல்லெண்ணத்துக்கே விட்டுவிட விரும்புகிறோம்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

மக்கள் சபையில்

கம்யூனிஸ்டுத் தீர்மானம் தோல்வி

புதுடில்லி, நவ. 15—

தேசியப் பாதுகாப்பு விதிகளின்கீழ் விலக்கப்பட்ட தொழிலாளர்கள் விஷயமாக ஒரு டிரிபியூனல் ஏற்படுத்த வேண்டுமென்று மக்கள் சபையில், கம்யூனிஸ்டுகள் கொண்டுவந்த ஒரு தீர்மானத்துக்கு ஆதரவாக 35 வாக்குகளும் எதிராக 87 வாக்குகளும் கிடைத்தனவாம்.

நேருவுக்கும்-சுப்பிரமணியத்திற்கும் உள்ள உறவு முறை

வி. கே. இராமசாமி முதலியார் நிர்ணயிக்கிறார்

சென்னை, நவ. 15—

மேல்சபை துணைத் தலைவருக்கும், சட்டமன்றத் துணைத் தலைவருக்கும் ஊதியத்தை உயர்த்த நிதி அமைச்சர் கொண்டுவந்த பிரேரணையை ஆதரித்து எதிர்க் கட்சித் தலைவர் வி. கே. இராமசாமி முதலியார் பேசுகையில், சபையின் மதிப்பு காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் தனக்கு எப்போதும் கருத்து வேற்றுமை கிடையாதென்று கூறி, இத்தகைய ஒரு நல்ல விஷயத்தை எதிர்க் கட்சிகளைக்கூடக் கலந்து செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று சுட்டிக்காட்டி, 'இத்துறையில் இந்தியா முழுவதும் ஒரேமாதிரியான ஊதிய முறை இருக்க வேண்டும்' என்று பண்டித நேரு கூறியதைக்கொண்டே நிதி அமைச்சர், தானாகவே யாரையும் கலக்காமல் நிவ்வாறெல்லாம் செய்வது வருந்துவதற்குரியதாகும்' என்று குறிப்பிட்டுவிட்டு, நிதி அமைச்சர் பண்டித நேருவின் படகில் ஒரு 'காபின் பாய்' (உள்ளறைப் பையன்)போல் பணியாற்றுகிறார் என்று கூறினார்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 16—11—57 சனி

உபதேசம் பலன் தருமா?

முதிர்ந்த அறிவுரைகளை எளிதில் புரியும்வண்ணம் தெளிவாகச் சொல்லுவதில் வல்லவர் பண்டித நேரு. ஆனால், அவர் தருகிற அறிவுரைகள், நிலவுகிற நிலைகளில்—தரப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், யார் தமது அறிவுரைகளைப் பின்பற்றவேண்டும் என்ற கருத்தில் அவர் அவற்றை வழங்குகிறாரோ, அவர்களால் பின்பற்றுவது இயலாததாயிருப்பது வழக்கமாகிவிட்டது.

நெருக்கடியான பிரச்சினைகளிலிருந்து வெகு தூரம் விலகிச் செல்லுவதற்கு இந்த அறிவுரை வழங்கலை ஒரு துரிதமான சாதனமாக அவர் கருதுகிறாரோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது, சில சந்தர்ப்பங்களில்!

வேலைநிறுத்த உரிமையை இந்திய சர்க்கார் அங்கீகரிக்கிறது; ஆனால், 'இன்றையச் சூழ்நிலையில் வேலைநிறுத்தங்களும், கதவடைப்புகளும் அபத்தமானவை' என்று புதுடில்லியில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் பேசுகையில் பண்டிதர் உபதேசித்திருக்கிறார்.

'தொழிலாளர்களின் வேலைநிறுத்த உரிமையை அங்கீகரிக்கிறோம்' என்று, ஏதோ பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுப்பதுபோலப் பேசுகிற பண்டிதர், அந்த உரிமையைப் பயன்படுத்துவதை, 'அபத்தம்' என்று கூறுகிறார்.

இதற்குக் காரணமாக அவர் கூறுவது, 'உற்பத்தி பெருக வேண்டுமென ஒருபுறம் பேசுகிறோம்; மறுபுறம், வேலைநிறுத்தங்களும் கதவடைப்புகளும் நடைபெற்றால் எப்படி?' என்பதுதான்.

உண்மைதான்—வேலைநிறுத்தங்களும் கதவடைப்புகளும் உற்பத்திப் பெருக்கத்திற்கு இடையூறு செய்யக்கூடியனதான்; ஆனால் இந்த உபதேசம் செய்வதன் மூலம், கதவடைப்பில் ஈடுபடும் முதலாளிகளைப் போலவே தொழிலாளர்களும், இதரும் வேலைநிறுத்தங்களில் அநியாயமாக ஈடுபடுகின்றனர் என்ற குற்றச்சாட்டினைப் பண்டிதர் சுமத்துகிறார் என்றே கருதவேண்டியுள்ளது.

தொழிலாளர்கள்—அவர்கள், நாட்டு நலனிலும், தொழிலாளர் நல்வாழ்விலும் விசுவாசமும், அக்கறையும் கொண்டில்லாதவர்களால் வழிநடத்தப்பட்டிருந்தாலன்றி, அநியாயமான வேலைநிறுத்தங்களில் ஈடுபடுகிறார்கள் என்று எவரும் சுலபத்தில் கூறிவிடமுடியாது.

தொழிலாளர்கள் ஈடுபடுகிற வேலைநிறுத்தங்கள் பெரும்பாலும்—நீதிமன்றங்களால் வழங்கப்படுகிற தீர்ப்புகளை அமுல் செய்வதற்காகவும், சர்க்கார் நிறைவேற்றித் தந்துள்ள தங்களின் பாதுகாப்பிற்கான சட்டங்களுக்கு உயிர் தருவதற்காகவுமே இருந்துவருகின்றன. இந்த வேலைநிறுத்தங்களுக்கு யார் பொறுப்பாளி? தொழிலாளர்கள் பொறுப்பாளிகளாயிருக்கமுடியாது. ஏனெனில், நீதிமன்றங்கள் வழங்குகிற தீர்ப்புப்படி, அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி, போனஸ் முதலியன தர மறுக்கிற முதலாளிகளின் போக்கும், தாங்கள் நிறைவேற்றிய சட்டங்களை தாங்களே அமுல் செய்யத் தவறுகிற சர்க்காரின் விசித்திரமான போக்கும்தான், பெரும்பாலும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களுக்குக் காரணமாகின்றன. இந்தமாதிரியான வேலைநிறுத்தங்களைக் காரணமாகக் காட்டித்தான் முதலாளிகள், கதவடைப்புகளில் தாராளமாக ஈடுபடுகின்றனர்.

உபதேசம் புரியக் கிளம்பும் பண்டிதர், 'வேலைநிறுத்தங்கள்', 'கதவடைப்புகள்' என்ற செய்தித் தலைப்புகளை மட்டும் பார்த்துவிட்டு, 'இவை எல்லாம் அபத்தம்' என்றுபேசிவிட்டால் போதாது. இவற்றிற்குக் காரணம் என்ன என்று அவர் காண முற்பட்டால் உண்மை தெரியவரும்.

'உற்பத்தி பெருக வேண்டும்; நாடு செழிக்கவேண்டும்; நாட்டின் ஒட்டுமொத்தமான நல்வாழ்வில்தான் நமது நல்வாழ்வும் அடங்கிக் கிடக்கிறது' என்ற உணர்வை நாட்டவருக்கு—குறிப்பாகத் தொழிலாளருக்கு ஊட்டுவதற்கு, குற்றச்சாட்டுகளை உள்ளடக்கிய உபதேசங்கள் நிச்சயம் பயன்படமாட்டா.

தாங்கள் நிறைவேற்றி வைத்திருக்கிற தொழிலாளருக்கான சிறுசிறு பாதுகாப்புச் சட்டங்களின் பலன்களை, தொழிலாளர்கள் போராடித்தான் அடையவேண்டும் என்ற நிலையை ஆங்காங்குள்ள சர்க்கார்கள் வளர்த்துவிட்டிருக்கும் போது, உயர உயர ஏறிநின்று கொண்டு உபதேசம் புரிவதினால் பலன் என்ன?

தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிற நியாயங்கள், துரிதமாக அனுபவசாத்தியமாகுமானால்—உள்ள சட்டங்களே ஒழுங்காக அமுல் செய்யப்படுமானால், வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகிற அவசியம் பெரும்பாலும் தொழிலாளருக்கு ஏற்படாது; தொழிலதிபர்களும் கதவடைப்புகளில் துணிச்சலுடன் ஈடுபடமாட்டார்கள்.

மேலும், 'வேலைநிறுத்தம் செய்ய உரிமை உண்டு; ஆனால் எத்தனை பெரிய அநீதிக்கு ஆளானாலும் அந்த உரிமையைப் பயன்படுத்தி நீதிபெற முற்படக்கூடாது' என்று உபதேசிப்பது, பண்டிதருக்கு சுலபம். ஆனால், அந்த நீதி கிடைப்பதைப் பொறுத்து, தங்களின் ஒரு நாள் பசிக்குக் கவளம் கிடைப்பது இருக்கிறது என்ற நிலையிலிருப்போருக்கு, உபதேசத்தைப் பின்பற்றுவது சுலபமல்ல!

ஒளியையும் வெப்பத்தையும் மின்சக்தியாக்க முயற்சி

ரஷ்யாவில் ஆராய்ச்சி

மாஸ்கோ, நவ. 15—

ஒளியையும், வெப்பத்தையும் மின்சார சக்தியாக மாற்றுவது சம்பந்தமாக இப்பொழுது ரஷ்யர்கள் ஆராய்ச்சி நடத்திவருகின்றனராம்!

வருமான வரி, இரயில் கட்டன வரி இவற்றில் மாநிலங்களுக்கு அதிகமான பங்கு

இரண்டாம் நிதிக்குழுவின் சிபாரிசுகள்

புதுடில்லி, நவ. 15—

நிதிக் கமிஷன் செய்துள்ள சிபார்சுளை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டு விட்டதாகவும், பார்லிமெண்டின் இந்தக் கூட்டத் தொடரிலேயே அதை அமுலாக்குவதற்கான மசோதா கொண்டு வரப்படும் என்றும் நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் நேற்று மக்கள் சபையில் அறிவித்தார்.

கமிஷன் சிபாரிசுப்படி, வருமான வரியிலிருந்து மாநிலங்கள் பெறும் மொத்தப் பங்கு இப்போதிருக்கும் 55 சத விகிதமாக உயர்த்தப்படும்.

இரயில்வே கட்டண 'சர்சார்ஜ்' விதிப்புமூலம் எதிர்பார்க்கப்படும் அதிக வருவாய் ரூ. 15 கோடியை மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இதன்படி சென்னை மாநிலத்துக்கு ரூ. 96 இலட்சம் கிடைக்கும்.

'எக்சைஸ்'வரியிலிருந்து மாநில சர்க்கார்களுக்கு ஒரு விகிதாச்சாரம் பகிர்ந்தளிக்கப்பட்டு வந்தது.

அப்படிப் பங்கு கிடைத்து வந்த பண்டங்களின் பட்டியலில் இப்பொழுது அதிகப்படியாக காபி, டீ, சர்க்கரை, காகிதம், அத்தியாவசியமற்ற தாவர எண்ணெய் முதலியவையும் சேர்க்க வேண்டுமெனச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதிரி பங்கீட்டுக்கு உரிய பண்டங்கள் எட்டு; அவற்றின் மூலம் வசூலாகும் 'நிகர' 'எக்சைஸ் வரி'யில் 25 சதவிகிதம் மாநிலங்களுக்குத் தரப்படும் என்பது சிபார்சின் அடக்கம்.

இரயில் கட்டண வரியில் மாநிலங்களுக்கு 99·15 சதவிகிதமும், மத்திய ஆட்சி நேரடிப் பகுதிகளுக்குக் கால் சதவிகிதமும் தரப்படும்.

மத்திய சர்க்காரிலிருந்து இதுவரை மாநிலங்கள் அனைத்திற்கும் கிடைத்து வந்தது ரூ. 93 கோடி; கமிஷனின் சிபாரிசுப்படி இனி ரூ. 140 கோடி கிடைக்கும்—அதாவது, ரூ. 47 கோடி அதிகப்படியாகக் கிடைக்கும்.

'எவர்மீதும் பகையில்லை' என்கிறார் பண்டிதர்!

புதுடில்லி, நவ. 14—

இந்தியாவிற்கு எந்த நாட்டிடமும் பகைமை உணர்ச்சி இல்லை என்பதாக பண்டித நேரு தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்கப் பொருளாதார நிபுணரான டாக்டர் லியான் எச். கீசெர்லிங் என்பார் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் பேசிய அவர், புரிந்துகொள்வது என்பது இரு வழிப்போக்குவரத்தாயிருக்கவேண்டும் என்றும், இந்தியா தனக்கென ஒரு கொள்கைவழி நடந்தபோதிலும் எவரையும்—குறிப்பாக அமெரிக்காவைப் பகைத்துக்கொள்ளவில்லை—கொள்ளமுடியாது என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஏறிய விலைகள் குறைந்துவிட்டதாம்!

இறக்குமதிக் கொள்கை தளர்த்தப்படுமா?

புதுடில்லி, நவ. 12—

மருந்துகள் போன்ற இறக்குமதிச் சாக்குகள் சிலவற்றின் விலைகள் ஆரம்பத்தில் ஏறத் தொடங்கியபோதிலும், இப்போது அவை ஓரளவுக்கு நிலையாக இருந்து வருகின்றன. என்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விநியோகம் குறைவதன் காரணமாய் விலைகள் அதிகரித்து விடாதபடி பார்த்துக்கொள்வதற்காக, இறக்குமதிப் பொருள்களின் விலைகள் அடிக்கடி பரிசீலிக்கப்பட்டு வருகிறதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

அடுத்த ஆறுமாதத்திற்கான இறக்குமதிக் கொள்கை வகுக்கப்படும்போது விலை நிலவரங்கள் கவனத்தில் கொள்ளப்படும் என்றும், அவசியம் என்று கருதப்படுகிற விஷயங்களில், இறக்குமதிக் கொள்கை தளர்த்தப்பட்டு விலைகள் நியாயமான ஒரு அளவில் இருக்கும்படி பார்த்துக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஓராண்டில் ரூ. 2¼ கோடி!

இந்தியாவில் வெளிநாட்டு மூலதனம்

புதுடில்லி, நவ. 15—

இந்தியாவில் போடப்பட்ட வெளிநாட்டு மூலதனத்தின் மொத்த மதிப்பு 1956-ல் மட்டும் ரூ. 2.24 கோடி என்று மக்கள் சபையில் உதவி நிதியமைச்சர் பகத் அறிவித்தார்.

12 அணா 'படி' போதுமானதுதானும்!

'எஸ். ஏ. பி.' பற்றி அன்பழகன் கேள்விக்கு அமைச்சர் பதில்

சென்னை, நவ. 14—

"விசேட ஆயுதப் போலீஸ் படையிலுள்ள போலீசார் வெளி இடங்களுக்கு செல்லும் போது அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 12 அணா மட்டுமே படிச் செலவு தரப்படுவது, அவர்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் என்பதை அரசாங்கம் அறியுமா?

என்று, தோழர் க. அன்பழகன் அவர்கள் சட்ட மன்றத்தில் கேட்டார்.

"சில நாட்கள் வெளியிடங்களுக்குச் செல்வதன் காரணமாக அவர்கள் வாழ்க்கை பாதிக்கப்படமாட்டாது' என்று அமைச்சர் பதிலளித்தார்.

அகதிகளுக்குத் தொடர்ந்து உதவி கிடைக்குமாம்!

புதுடில்லி, நவ. 15—

"கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து ஒடிவரும் அகதிகளுக்கு எல்லா வசதிகளும் தொடர்ந்து அளிக்க இந்திய அரசாங்கம் தயார் என்றாலும், அதற்கு ஓர் கால வரம்பு இல்லாமல் எதிர்காலத்திலும் பல தலைமுறைகளுக்கு இத்தகைய பொறுப்புக்களை ஏற்பது இயலாத காரியம்" என்று தலைமை அமைச்சர் நேரு மக்கள் சபையில் தெரிவித்தார்.

என்ன செய்வது என்று தெரியவில்லையாம்!

சென்னை, நவ. 14—

சென்னை—மவுண்ட் ரோடிலுள்ள சட்டசபை மண்டபத்தைக் கட்டுவதற்கு ரூ. 9,24,609 செலவிடப்பட்டதாம்; அந்தக் கட்டிடத்தை என்ன செய்வது என்று இன்னும் முடிவு செய்யவில்லையாம்!

அமைச்சர் கக்கன், சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்தார்.

வெள்ளையரை எதிர்த்த தமிழ்நாட்டுப் பாளையக்காரர்கள்

சட்டசபையில் ஏ.வி.பி. ஆசைத்தம்பி கேள்வி

சென்னை, நவ. 14—

பாளையக்காரர்கள் வெள்ளையரை எதிர்த்து 1797-ம் ஆண்டு முதல் 1801-ம் ஆண்டு வரை போராட்டம் நடத்தியது பற்றிய தகவலை, சட்டமன்றத்தில் நிதி அமைச்சர் வெளியிட்டார்.

"1857ல் நடைபெற்ற சிப்பாய்க் கலகத்திற்கு முன்னரே தமிழர் வெள்ளையரை எதிர்த்துப் போராட்டம் நடத்தியுள்ளதை மத்திய அரசாங்கத்திற்கு இம் மாநில சர்க்கார் அறிவிப்பார்களா?"

என்று, தோழர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள், சட்டமன்றத்தில் கேட்டார்.

"அதற்கு அவசியம் இல்லை" என்று அமைச்சர், நிராகரித்தார்.

ஆரம்பப் பள்ளிச் சிறுவர்களுக்கு இலவசப் பகல் உணவு

சர்க்கார் நிபந்தனை?

சென்னை, நவ. 15—

மாநிலத்திலுள்ள ஆரம்பப் பள்ளிகளிலுள்ள ஏழைச் சிறுவர்களுக்கு இலவச உணவு அளிக்கும் திட்டத்திற்காக சர்க்கார் ரூ. 10 இலட்சம் அனுமதித்துள்ளனர். நவம்பர் முதல் தேதியிலிருந்து இந்தத் திட்டம் மாநிலத்தில் சென்னைநகர் தவிர, மற்ற எல்லா நகர்ப்புற, கிராமப்புற பகுதிகளிலும் அமுல் நடத்தப்பட அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையிலும் ஏழை மாணவர்களின் நன்மைக்காக இத்திட்டம் அமுல் செய்யப்படுகிறது.

சாப்பாடு ஒன்றுக்கு ஆறு புதிய காசு வீதம் பொதுமக்களிடமிருந்து பணமாகவோ, அல்லது பொருளாகவோ அந்தந்த இடங்களிலிருந்து உதவி கிடைத்தால் தான் அத்திட்டம் நடைமுறையில் வரும். ஒரு மாணவருக்கு, ஒரு சாப்பாட்டிற்கு ஆறு புதிய காசுகளுக்குமேல் செலவாகும் தொகைப்படி இந்த மானியம் கணக்கிடப்படும்.

சில இலாகாக்களுக்குட்பட்ட பள்ளிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பள்ளிகளிலும் தற்போது நிலவிவரும் சர்க்காரின் முழுச் செலவில் உணவளிக்கும் போடும் ஏற்பாடுகள் இத்திட்டத்தினால் பாதிக்கப்படமாட்டாது.

சுமாராகப் பலன் கிடைத்துள்ளதாம்.

உணவு நிலை குறித்து அமைச்சரின் பெருமிதம்

புதுடில்லி, நவ. 14—

உணவுத் தானிய விலைகளைக் கட்டுப்படுத்த ஜூலைத் திங்கள் மத்தியிலிருந்து அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக, சுமாரான பலன் கிட்டியுள்ளதாம்.

மத்திய உணவு அமைச்சர் ஏ. பி. ஜெயின் மக்கள் சபையில் நேற்று இவ்வாறு கூறிப் பெருமைப் பட்டுக்கொண்டிருக்கிறார்.

ஆந்திர மாநிலத்தின் மூன்று மாவட்டங்களில் அரிசி, நெல்லுக்கு உச்ச அளவு விலை நிர்ணயிக்கப்பட்டது, அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஒன்றும்.

ஒரிசாவிலும், ஆந்திராவிலும் இதுவரை சுமார். 40,000 டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகவும், தொடர்ந்து கொள்முதல் நடந்து கொண்டிருப்பதாகவும், 'மார்க்கெட்'டைப் பாதிக்காத வகையில் எவ்வளவு கிடைக்கிறதோ அவ்வளவையும் சர்க்கார் வாங்கும் என்றும் அவர் கூறினர்.

‘எல்லோருக்கும் எழுத்தறிவு கற்பிக்க ஏற்பாடு வேண்டும்’

சட்டசபையில் ஆசைத்தம்பி பேச்சு

கல்விபற்றிய ‘வெள்ளை அறிக்கை’யின்மீது, சட்டசபையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது :—

“கல்வியினுடைய அவசியத்தைப் பற்றி உலகத்திலேயுள்ள மற்ற நாடுகளில் இருக்கிறவர்கள் சொல்லியிருப்பதைவிட, அண்மையிலே நமது நாட்டிலே தோன்றியுள்ள பேறிஞர்கள் எல்லாம் அதனுடைய அவசியத்தைப்பற்றி மாத்திரம் அல்ல—அவசரத்தைப் பற்றியும் அழகாக, கவிதை மூலமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

“அந்தக் கவிதை மூலமாக நான் என்ன உணர்கிறேனென்றால், அன்ன சத்திரம் ஆயிரம் கட்டி எவ்வளவுதான் சாப்பாடு போட்டாலும் மறுபடியும், பசிக்கிறதே என்று கேட்கக்கூடியவர்கள் இருப்பார்கள். ஆலயங்கள் 1,000 கட்டி ஆண்டவனை ஆங்காங்கு நிறுத்தி வைத்தாலும் மேலும் சில குறைகளைச் சொல்லி நிறைவு கேட்க ஆண்டவனிடம் வந்து நிற்பார்கள். ஆனால், ஒரு ஏழைக்கு எழுத்து அறிவைக் கொடுத்து அதன் மூலம் அவனுக்குப் போதிய அறிவைக் கொடுத்து விட்டோம் என்று சொன்னால், அவனவன் கால்களால் நடந்து வாழ்ந்துகொள்ளக்கூடிய நிலைமையைப் பெறமுடியும் என்ற அவசியத்தையும்—அத்தகைய நிலைமை இந்த நாட்டில் இல்லை; எனவே—அதை அவசரப்படுத்தவேண்டும் என்ற தன்மையையும் கருதி பாடியிருக்கவேண்டும்.

“இதனுடைய அவசியத்திற்கு உட்பட்டு நமது அரசியல் சட்டத்தில், 10 ஆண்டுகளுக்குள்ளாக இந்த நாட்டிலே அனைவரும் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற அளவுக்கு சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கண்டிருக்கிறது. ஆனால், நாட்டினுடைய நிதி நிலைமை இடம் கொடுக்காத காரணத்தினாலும், இடம் கொடுக்கக்கூடிய நிலைமையிலே இந்த நாட்டு அரசியல் அமைப்பு இல்லாததினாலும்—அதாவது இங்கு இருக்கின்ற பணமெல்லாம் வடநாட்டு சர்க்காருக்குப்போகின்ற காரணத்தினாலே—நமக்கு இந்த துரதிர்ஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

“உலகத்திலே கல்வி பயிலாத மக்கள் 50 சதவிகிதம் என்று கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். அந்த 50 சதவிகிதத்திலே—துரதிர்ஷ்டவசமாக—நம்முடைய இந்திய உபகண்டத்திலே அதிகம் பேர் இருக்கிறார்கள். இந்தியாவினுடைய கல்வியின்மையைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இங்கே இருக்கின்ற ஒவ்வொரு ‘லெவேட்ரி’ (கக்கூசுகள்)யிலும், இரயில் பெட்டியிலும் போய்ப் பார்த்தால் தான் தெரியும். ‘ஆண்கள்’—‘பெண்கள்’ என்று படம்போட்டு காட்டக்கூடிய அளவுக்கு ‘தற்குறி’த்தன்மை இந்த நாட்டிலே இருக்கிறது. படம் போட்டு வைத்திருந்தும் கூட, பெண்கள் வண்டியில் ஆண்கள் ஏறுவதைப் பார்க்கிறோம்! அந்த அளவுக்கு மோசமான நிலைமை நம் நாட்டிலே இருந்துவருகிறது! இந்த நிலைமையைக் கூடியவரையிலே மாற்றி அமைத்து, நல்ல அளவுக்குக் கல்வியைத் தரமாகக் கொண்டுவருவதற்கு கல்வி அமைச்சர் இந்த ‘வெள்ளை அறிக்கை’யில் பல திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார்.

“கல்வித் திட்டத்தை அடிக்கடி மந்திரிகள் மாற்றி அமைத்து மக்களுடைய கல்வியைக் கெடுத்துவிடாமல் இருக்க ஒரு சட்ட ஏற்பாடாகச் செய்துவிடலாம் என்றும், அப்படிச் செய்தால் இந்த சபையிலே பின்னால் யாரும் எதையும் செய்யக்கூடிய நிலைமை ஏற்படாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

“மேலும் அமைச்சரவர்கள், ‘கல்வியின் தராதரம் ஒரு இடத்திற்கும் மற்றொரு இடத்திற்கும் மாறுபட்டதாக இருக்கிறது’ என்றும், ‘சேலம், கோவை மாவட்டங்களில் கல்வியின் தரம் மோசமாகி இருப்பதாகவும் குறிப்பிட்டார். ஒரே மாநிலத்தில்—ஒரே பகுதியில் மாறுபட்ட தராதரம் இருப்பதற்குக் காரணம், அமைச்சர் குறிப்பிட்டபடி இந்த நாட்டிலே கல்வியில் அடிக்கடி ஏற்படுகின்ற மாறுதலும், பாடத்திட்டம் ஒரேமாதிரியாக இல்லாததும் தான் என்று நான் கருதுகிறேன்.

கல்வி அமைச்சரவர்கள் பாடப் புத்தகங்களைத் தனிப்பட்டவர்கள் வெளியிடுவதைவிட அரசாங்கமே அதை மேற்கொண்டு வெளியிட உத்தேசிப்பதாகச் சொன்னார்; அரசாங்கம் இதில் மற்றொன்றையும் கவனிக்கவேண்டும். இப்பொழுது பாடத் திட்டமானது திருநெல்வேலி மாவட்ட ஆரம்பப் பள்ளியில் ஒரு மாதிரியாகவும், கோவை மாவட்டத்தில் ஒரு மாதிரியாகவும், சென்னையில் ஒருமாதிரியாகவும் இருக்கிறது; எஸ். எஸ். எல். சி. தவிர இதர புத்தகங்களெல்லாம் மாறுபட்ட முறையில் இருக்கிற காரணத்தினால்தான் கல்வியினுடைய தராதரம் மாறுபட்டு இருக்கிறது. எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி, எஸ். எஸ். எல். சி. புத்தகத்தைப்போல ஒரே மாதிரியான முறையில் புத்தகங்கள் இருக்க வேண்டும். ஆனால் ‘இம்மாதிரியான நிலைமை வருமானால் பல ஆசிரியர்களுக்கு எழுதக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போய்விடும்’ என்று பயப்படுகிறார்கள். இது சம்பந்தமாக, எழுதுகிறவர்கள் புத்தகங்களையெல்லாம் வாங்கி, அதனைச் சிறந்த முறையில் இருக்கும்படி ஒரு புத்தகமாகத் திரட்டி சர்க்கார் அதனை வெளியிடலாம். கன்னியாகுமரியிலும், சென்னையிலும் ஒரே மாதிரியான பாடப் புத்தகந்தான் இருக்க வேண்டும். அந்த நிலைமை இருக்குமானால், அதிகாரிகளை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றினால்கூட, ‘அய்யோ, என்பிள்ளை இங்கு படிக்கிறானே’ என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்படாது. ‘அந்த அளவுக்குப் பாடத்திட்டத்தைச் செய்துவிட்டோம்’ என்று சொன்னால், கல்வியினுடைய தராதரம் மாறுபட்டு இருக்க நியாயமில்லை. ‘அப்படியிருந்தது’ என்று சொன்னால், திட்டத்தில் கோளாறு இல்லை—ஆசிரியர்களுடைய கோளாறாகத்தான் இருக்க முடியும்.

“சென்னை மாநிலம் பூராவும் ஒரே மாதிரியான தரம், எந்த இடத்திலும் ஒரே மாதிரியான படிப்பு இருந்தால்தான், எந்த ஆசிரியர்கள் எங்கே போனாலும் அதற்கு வசதியாக இருக்கும்—அது நன்மையாகவும் இருக்கும். அந்த மாதிரியான முறையில் சென்னை மாநிலம் பூராவும் ஒரே மாதிரியான புத்தகங்களை சர்க்கார் வெளியிடுவார்களானால், அந்தப் புத்தகங்களை மிகக் குறைந்த விலைக்கு விற்க முடியும். அதுமாத்திரமல்ல; கொஞ்சம் அதிகமான விலைக்கு விற்றாலும் கூட, ஓரளவு அதிகப் பணம் கிடைக்கும். அம்மாதிரி கிடைக்கின்ற பணத்தை கல்வி முன்னேற்றத்திற்குத் தேவைப்படுகின்ற பற்றாக்குறையை ஈடு செய்ய முடியும்.

“குறிப்பிட்ட வருடங்களுக்குள்ளாக நாம் போதிய அளவு கல்வியைக் கொடுக்க முடியவில்லை என்பதற்குக் காரணம், போதிய நிதி இல்லை; அதற்காகப் போதிய அளவு கட்டிடங்கள், ஆசிரியர்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. இந்த இடத்திலே சர்க்கார் ஒரு நல்ல முறையைக் கவனிக்க வேண்டும்; பழைய காலத்தில் நம்முடைய பள்ளிக்கூடங்களெல்லாம் சாவடிகளிலும், ஆலயங்களிலும்தான் நடத்தப்பட்டன. கட்டிடங்கள் இல்லாத கவலையை அடியோடு விட்டுவிட்டு, எல்லாக் கிராமங்களிலும்—சாவடி இல்லாவிட்டாலும்—ஒரு சாவடி ஏற்படுத்திக்கொள்ளலாம். அதற்கு அதிகச் செலவு ஏற்படப்போவதில்லை. அந்தமாதிரியான இடங்களில் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தலாம். அங்கு ஆலயங்கள் இருக்குமானால், பகல் நேரத்தில் ஆலயங்களில் பள்ளிக்கூடங்களை நடத்தலாம். இம்மாதிரிச் செய்தால், ‘பள்ளிக்கூடங்கள் வைப்பதற்கு கட்டிடம் இல்லை’ என்கிற குறையை சர்க்கார் நிச்சயமாக நீக்கிகொள்ள முடியும்.

“அப்படிச் செய்தால் ஆசிரியர்களுக்கு என்ன செய்வது என்று கேட்கலாம். அதற்கு சர்க்கார் ஓராசிரியர் பள்ளிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்; அதை நாம் நிச்சயமாக நீடிக்கலாம். ஆரம்பப் பள்ளிகளில் சொல்லிக் கொடுப்பதற்குப் பெரிய படிப்பு, பெரிய பயிற்சி தேவையில்லை. நமது நாட்டில் மூன்றாவது பாரம் முதல் எஸ்.எஸ்.எல்.சி. வரை தேறினவர்கள், தேறாதவர்கள் இவர்களை இந்தத் துறையில் தக்க மாதிரியான பயிற்சி கொடுக்கக்கூடிய அளவுக்கு பழக்கினால் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறும். ஆனால் சர்க்கார் துரதிருஷ்டவசமாக ‘ஓராசிரியர்களுக்கு இரண்டு வருடப் பயிற்சி தேவை’ என்று சொல்லி, ரூ. 60 சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்கு பயிற்சிக் காலத்தில் ரூ. 18 மட்டுமே சம்பளமாகக் கொடுத்துவருகிறார்கள்.

“1953-ல் வேலைக்கு சேர்ந்து இதுவரையிலும் இயற்கையாகவே பயிற்சி பெற்றுவரும் ஓராசிரியர்களுக்கு இன்னும் இரண்டு வருடப் பயிற்சி தேவைதான் என்பது பெரிய ஆராய்ச்சிக் குரியதுதான்; ஆனால் ஒன்றைக் கவனிக்க வேண்டும்—ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு இவ்வளவு பெரிய பயிற்சி தேவையா என்பதுதான் அது!

“ஆரம்பப் பள்ளிகளின் நோக்கம், இந்த நாட்டில் இருக்கக்கூடிய எல்லோரும் எழுதப் படிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான். எல்லோருக்கும் கையெழுத்துப் போடத் தெரியும் என்ற முறையிலே இருக்க வேண்டுமென்று சொன்னால், அந்த ஆசிரியர்களுக்குப் பெரிய பயிற்சி தேவையில்லை; வேண்டுமானால், கோடை விடுமுறை நாட்களில் இரண்டு மாத காலத்தை அவர்களுக்கு ஒதுக்கி, குறுகிய காலப் பயிற்சி கொடுத்து அவர்களைத் திறமையாக்க முடியும். பழைய காலத்துத் திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் எந்தப் பயிற்சிப் பள்ளிகளிலும் படித்தவர்கள் அல்ல. அம்மாதிரியான முறையிலே, குறுகியகாலப் பயிற்சி கொடுத்து நிறைய ஓராசிரியர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டு, அதிக மக்களுக்குக் கல்வி கொடுக்க சர்க்கார் முன்வர வேண்டும்.

“அறநிலையப் பாதுகாப்பு மசோதா நிறைவேற்றப்படும் போது சர்க்கார் தந்த அறிக்கைப்படி இந்த நாட்டில் பெரிய மடங்களும், சிறிய ஆலயங்களும் உட்பட சுமார் ஒரு இலட்சம் இருப்பதாகவும், அந்த ஆலயங்களுக்கும் மடங்களுக்கும் சொந்தமாக 8 இலட்சம் ஏக்கர் நிலம் இருப்பதாகவும், ஆண்டிற்கு ரூ. 3-கோடிக்கு வருமானம் வருவதாகவும் கணக்குத் தந்திருக்கிறார்கள். ஆனால், இவ்வளவும் எந்த முறையில் பயன்படுத்தப்படுகிறது என்பது ஒருபக்கமிருக்க, அந்தத் தொகையிலிருந்து கல்விக்காக ஒரு பெரும் பகுதியை எடுத்துக் கொள்வதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. இந்த நாட்டில் கல்வி வேண்டாம் என்று யாரும் சொல்ல மாட்டார்கள்; நாம் கொடுக்கிற பணம்தான் அது. அதைக் கல்விக்காகப் பயன்படுத்துவதற்கு சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த அளவில், ‘இந்த நாட்டில் கூடிய விரைவில் எல்லோருக்கும் எழுதப்படிக்கத் தெரியும்’ என்ற நிலையை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.”

லேவாதேவி சட்ட விவாதம்

எம்.பி.சுப்பிரமணியம், அன்பழகன் கருத்துரை

சென்னை, நவ. 14—

லேவாதேவி சட்டத்தில் திருத்தத்திற்கான கருத்துக்களைத் தெரிவித்து தோழர் எம். பி. சுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“இந்தச் சட்டத்தில், ‘உண்டியல்’ முறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. அது கூடாது என்பதில் கருத்து வேறுபாடு அதிகம் காணப்படவில்லை. சட்ட மன்ற உறுப்பினர்கள் பெரும்பாலோர் ‘உண்டியல்’ முறையையும்சட்டத்தின்கீழ் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

“மேலும், கடன் கொடுத்தவர்கள், கடன் பெற்றவர்களின் உற்றார் உறவினரிடம் தகவல் கேட்பதுகூட, ‘இம்சித்தல்’ என்று பொருள்பட இருப்பதைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியை நீக்கி விட்டால்கூட, கடன் கொடுத்தவர்கள் தொல்லைதரும் செயலில் ஈடுபடுவதைத் தடுக்க இடமிருக்கிறது.

“இந்தச் சட்டம், நகரப் பகுதியிலுள்ளவர்களுக்குப் பயன்தரும்; கிராமப்புறங்களிலிருப்பவர்களுக்கு இந்தச் சட்டத்தின் பயன் ஏற்படாது. எனவே, விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தரப்பட்டுள்ள விலக்கை நீக்கிவிடுவதும் நல்லதாகும்.

“மேலும், அரசாங்க ஊழியர்களாகவும், டாக்டர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் உள்ளவர்கள், கடன் தருவதற்குத் தரப்பட்டுள்ள சலுகையையும் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.”

★

தோழர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“சாதாரணமாக ‘வியாபாரி களுக்குத் தரப்படும் கடன் எளிதில் திரும்பப் பெறப்படுவதன் காரணமாகவும், விவசாயிகளுக்குத் தரப்படும் கடன்கள் வெகு சுலபத்தில் திரும்பி வராத நிலை இருப்பதன் காரணமாகவும், வியாபாரிகளுக்கு மட்டுமே வட்டிக்குக் கடன் கொடுத்து வாழ்ந்துவந்த கடன்காரர்களுக்கு, இந்தச் சட்டத்தில் விதிவிலக்கு தருவது நியாயமல்ல. இதனால் ‘உண்டி’த் தொழிலுக்கு எந்தவிதக் கட்டுப்பாடும் இருக்காது. விவசாயிகள் பாதிக்கப்படவும், வியாபாரிகள் ஓரளவு பாதுகாப்புப் பெறவுமே சட்டம் பயன்படும். ‘உண்டி’த் தொழிலுக்கு விதிவிலக்களிப்பது நீதிக்கும், நியாயத்திற்கும் பொருத்தமானதல்ல. ‘உண்டி’க்கு வட்டி விகிதம் நிர்ணயிக்கப்படாதது மற்றொரு குறையாகும்.

“கேட்டால்தான் கடன்வரும்—என்று ஒரு தமிழில் ஒரு பழமொழி உண்டு. எனவே, கொடுத்த கடனைக் கேட்பதே தவறு என்று கருதுவது கூடாது.

“காபூலிகளும், பட்டாணியர்களும், கடன் பெற்றவர்களை மறிமறித்துத் தொல்லைபடுத்துவதையும், மேலும் பல இன்னல்கள் விளைவிக்கும் செயலில் ஈடுபடுவதையும் தடுக்க ஒரு தனிச் சட்டம் கொண்டுவந்தால்கூட நல்லது என்று நான் கூறுவேன்.

“மேலும், லேவாதேவிச் சட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் கணக்கை, கடன் பெறுபவர்கள் புரிந்துகொள்ளும் மொழி அல்லது வட்டார மொழியில் எழுத வேண்டும் என்று கண்டிப்பாகக் கூறப்பட வேண்டும். தமிழில் அக்கறை உண்டு என்று கூறிக்கொள்ளும் அரசாங்கம் இதைச் செய்ய முன்வர வேண்டும்.”

பண்டைத் தமிழகத் துறைமுகங்களை புதுப்பிக்க வேண்டும்

சட்டசபையில் கழகத்தவர் கோரிக்கை

சிறிய துறைமுகங்களைச் சீர்படுத்தி ஏற்றுமதி—இறக்குமதிக்கான வழிகளை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று சட்டமன்றத்தில் முன்மொழியப்பட்ட தீர்மானத்தை தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, மு. கருணாநிதி ஆகியோர் ஆதரித்துப் பேசியுள்ளனர்.

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“நாகப்பட்டினம், கடலூர், பரங்கிப்பேட்டை முதலிய துறைமுகங்களை விரிவுபடுத்தி வசதிகள் ஏற்படுத்த வேண்டும்; மணிலா ஏற்றுமதிக்கும், சிங்கப்பூர் பிரயாணிகளுக்கும் அது வசதியளிக்கும்.

“தூத்துக்குடித் துறைமுகத்தை விரிவாக்கி, அதற்கு வ. உ. சி. பெயரை வைக்க வேண்டும்.

“நீண்ட நாட்களாகத் தாமதப்படுத்தப்பட்டுவரும் இந்தத் துறைமுகச் சீர்திருத்தப் பிரச்சினையில் மாநில அரசாங்கம் போதிய அக்கறை செலுத்தி, இதற்காக மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும்.”

தோழர் மு. கருணாநிதி அவர்கள் பேசுகையில், தமிழ்நாட்டின் கடலோரச் சிறப்பை மறைக்க இயலாத நிலை அரசாங்கத்திற்கு இருப்பதை எடுத்துரைத்தும், உலக நாடுகளுடன் தமிழகம் கொண்டிருந்த வாணிபத் தொடர்பை நினைவுபடுத்தியும், தமிழகத் துறைமுகங்களின் சிறப்பை வருணித்தும், இந்த அரசாங்கம் வரலாற்றுச் சிறப்பு பெற்ற பூம்புகார் துறைமுகத்தையும் சீர்படுத்த வேண்டுமென்றும் கூறி, நாகை, மகாபலிபுரம், பூம்புகார், குளச்சல் போன்ற துறைமுகங்களைச் சீர்படுத்தியும், மீண்டும் தோற்றுவித்தும், தமிழகத்தின் ஏற்றத்திற்கு வழி காண வேண்டும் எனறும் கேட்டுக் கொண்டு, தமிழக வாணிபம் செழிக்க—வளம் பெற—முன்னேற அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்றும கேட்டுக் கொண்டார்.

'கையேர்' 'மாட்டேர்' வாரதாரர்களுக்கு நியாயவாரச் சட்ட பாதுகாப்பு வேண்டும்

சட்டசபையில் மு. கருணாநிதி

சென்னை சாகுபடி செய்யும் குத்தகைக்காரர்கள் (திருத்த) மசோதாவில், 'கையேர்' 'மாட்டேர்' சாகுபடியாளர்களையும், 'முச்சலிக்கா' எழுதிக் கொடுத்த சாகுபடியாளர்களையும் சேர்த்துக் கொள்வதற்கு வகை செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து, சட்டமன்றத்தில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"விவசாயிகளின் நிலை எந்த அளவு பாதிக்கப்பட்டுள்ளது என்று அண்மையில் பார்த்தோம். நிறைவேற்றப்பட்ட புதிய சட்டத்தில் பல குறைபாடுகள்—ஓட்டை உடைசல்கள் உள்ளன; அதன் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதை சபையில் நான் பலமுறை எடுத்துரைத்திருக்கிறேன்; அமைச்சர்களிடமும் தனியே எடுத்துக் காட்டியுள்ளேன். விவசாயிகளுக்குப் பாதுகாப்பளிக்க 'நியாயவார'ச் சட்டம் கொண்டுவரப்பட்டும், சாணக்கியத் தந்திரம்படைத்தவர்கள் சட்டத்திலே உள்ள ஓட்டை உடைசல்களைப் பயன்படுத்திக்கொண்டு, தங்களுக்குச் சாதகமாகச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள முனைந்துவிட்டனர்; அதற்கான சான்றுகளை நாம் நிதர்சனமாகக் கண்டோம்.

"ஒரு திங்களுக்கு முன்னர் திருச்சியில் 'கையேர்' 'மாட்டேர்' 'முச்சலிக்கா' பெற்ற 10,000 விவசாயிகள், சட்டத்தின் நன்மைகளைப் பெற முடியாது போயிற்று; இது எல்லோருக்கும் தெரியும். சட்டத்தின் உள்நோக்கம் நிறைவேறவில்லை.

"நங்கவரத்தில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டம், தனிக் கட்சியின் செல்வாக்கை அதிகரிக்கப் பயன்படுத்தப்பட்டது என்று தி. மு. க.-வைப் பார்த்து அமைச்சர்கள் குறை கூறுகிறார்களே தவிர, பிரச்சினையைச் சரிவர அணுகவில்லை.

"சட்டத்தில் ஓட்டை இருப்பதை அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

"பெண்கள்கூட, குடத்தில் ஓட்டை ஏற்பட்டால் புளியை வைத்து அடைப்பார்கள்; ஆனால் இந்த அரசாங்கம், ஒரு அவசரச் சட்டம்கூட கொண்டுவர முன்வரவில்லை.

"நங்கவரம் போராட்டம் அமைதியாக—காந்தியார் கடைப்பிடித்த அகிம்சையின் அடிப்படையில், அண்ணா அவர்கள் எடுத்துரைத்த கண்ணியம்—கட்டுப்பாடு—கடமை என்ற உணர்ச்சியின் அடிப்படையில் நடைபெற்றது. நான் ஒருநாள் அவசரமாக சென்னை வந்தபோது, மிகக் கட்டுப்பாடுடன் அங்கு அறப்போர் நடைபெற்றதே போதிய சான்றாகும்.

"அங்கு நடைபெற்ற அறப் போருக்கு அடிப்படைக் காரணம் என்ன? 'முச்சலிக்கா' என்ற அடிமைச் சீட்டுக்கு விவசாயிகள் பலியாகியுள்ளனர்.

"இதனால் விவசாயிகள் நிலச் சுவான்தார்களுக்கு அடிமைப் பட்டு, அவர்கள் தருவதை மட்டுமே பெற்றுக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் 'குத்தகைதாரர்' என்ற பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்கள், '60—40' என்ற 'காமதேனு கற்பக விருட்ச'த்தின் நன்மையை அடையமுடியும்.

"மற்றொரு வழியும் இருக்கிறது; 'கையேர்', 'மாட்டேர்' 'முச்சலிகா'க்காரர்களை, 'ஒப்பந்தம்' என்ற ஒரு பொதுச் சொல்லின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்; அப்போதுதான் விவசாயிகள், கொடுமையிலிருந்து விடுபட்டு முன்னேற முடியும்."

உள்நாட்டுச் சரக்கை அயல்நாட்டுச் சரக்காக்க மோசடி!

சட்டசபையில் அன்பழகன் கேள்வி

சென்னை, நவ. 14—

சென்னை மாநிலத்தில் சாத்தூர் பகுதியில் ஊற்றுப் பேனாக்களுக்கான 'நிப்'புகளில் 'யு.எஸ்.ஏ.' என்று போடப்படுகிறதாம்!

"மக்கள் இதைக் கண்டு, இவை அமெரிக்காவில் தயாரித்தவை என்று நிச்சயம் நம்புவார்கள்; ஆனால், 'உமா சங்கர் ஏஜென்சி' என்றும், 'ஐக்கிய விற்பனைச் சங்கம்' என்றும் அந்த 'யு.எஸ்.ஏ.' என்ற ஆங்கில எழுத்துக்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு 'நிப்'புகளில் பொறிக்கப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியும்" என்று சட்ட மன்றத்தில் அமைச்சர் வெங்கட்ராமன் தெரிவித்தார்.

"இதே 'நிப்'புகளை பம்பாயிலுள்ள வியாபாரிகள் வாங்கி, வெளிநாட்டு சரக்காக அவைகளை விற்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?"

என்று, தோழர் க. அன்பழகன் கேட்டார்.

'இல்லை' என்று அமைச்சர் பதிலளித்தார்.

'விவசாயிகள், பயிரிடப்படும் நிலம் பற்றி புள்ளிவிவரம் சேகரிக்க வேண்டும்'

சட்டசபையில் களம்பூர் அண்ணாமலை வற்புறுத்தல்

சென்னை சாகுபடி செய்யும் குத்தகைக்காரர்கள் மசோதா மீது கொண்டுவரப்பட்ட திருத்தத்தை ஆதரித்து, சட்டமன்றத்தில், தோழர் எஸ். எம். அண்ணாமலை அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"'சும்மா இருந்த சங்கை ஊதி கெடுத்தான் ஆண்டி' என்பார்கள்; அதைப்போல், நிலச்சுவான்தார்களுக்கும் — விவசாயிகளுக்கும் இருந்த நல்லுறவை முறியடிக்கும்வகையில் கொண்டுவரப்பட்ட சட்டத்தில் 'ஓட்டை'கள் இருப்பது தெரிந்திருந்தும் கூட, அரசாங்கம், ஆவன செய்வதில் வீணாகக் காலம் கடத்திவருகிறது.

"பாதுகாப்பு என்பது பெயரளவில் உள்ளதே தவிர, இந்தச் சட்டம் விவசாயிகளுக்கு இன்னல்களையே விளைவித்துள்ளது. திருச்சியிலிருந்து விவசாயிகள் தூதுக்குழு ஒன்று இங்கு வந்து அமைச்சரைச் சந்தித்து குறைகளை தெரிவித்துள்ளது. களம்பூர் விவசாயிகளின் குறைகள் பற்றி அச்சிட்டதோர் 'மகசர்' மூலம் முதலமைச்சரிடம் நான் தந்தேன்; 'இப்போதுள்ள சட்டம் விவசாயிகள் நலனைப் பாதுகாப்பதற்குப் போதுமானதல்ல' என்றும் கூறினேன்.

"எந்த நிலத்தில் எந்த விவசாயி, பயிரிட்டுவருகிறான் என்பதற்கான புள்ளிவிவரங்களை, வாக்காளர் பட்டியல் தயாரிப்பது போலத் தயாரித்து, குறிப்பிட்ட பொது இடங்களில் வைக்கப்பட வேண்டும்.

"விவசாயிகளின் பெயர்கள் விடப்பட்டிருந்தால் ஆர். டி. ஓ. மூலம் சேர்ப்பதற்கான முறையும் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

வேலூர் நகரசபை

பற்றி சட்டசபையில் அண்ணாமலை கேள்வி

சென்னை, நவ. 15—

வேலூர் நகரசபை உறுப்பினர் திரு. ஜியாட்டின் அவர்கள், 3 மாத காலம்—10—5—56 முதல் தொடர்ந்து சபைக்கு வராத காரணத்தினால் 10—8—56 முதல் அவர் பதவியை இழந்ததாகக் கருதப்பட்டது என்றும், அவர் வட ஆற்காடு வழக்குமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், நீதிமன்ற முடிவுகள் தெரியும்வரை அவர் உறுப்பினராக இருப்பதற்கு அதிகாரம் பெற்றுள்ளார் என்றும், நகரசபைத் தலைவர் அவரை வேலூர் நகரசபை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அனுமதித்துவருவதாகவும், ஸ்தல ஸ்தாபன இலாகா அமைச்சர் லூர்து அம்மையார், தோழர் எஸ். எம். அண்ணாமலை அவர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

தென்னவரை அவமானப்படுத்திய டெல்லி

ஆண்டையைத் தப்புவிக்க அடிமையின் முயற்சி

சென்னை, நவ. 15—

சுதந்தர நூற்றாண்டு விழாவின் போது வெளியிடப்பட்ட 'சுதந்தர யாத்திரை' என்ற திரைப் படத்தில் தென்னாட்டைபற்றியும், தமிழரின் சுதந்தரப் போராட்டம் பற்றியும் காட்டப்படாததை டெல்லியின் கவனத்திற்கு சென்னை சர்க்கார் கொண்டு சென்றுள்ளதாம்.

இந்தப் பகிரங்க அநீதிக்கு மத்திய அரசு பொறுப்பல்லவாம்! படம் தயாரிக்கும் பொறுப்பு நூற்றாண்டு விழாக் குழுவைச் சேர்ந்ததாம்!

சட்டமன்றத்தில், கேள்வி நேரத்தின்போது நிதி அமைச்சர் சுப்பிரமணியம் இதனைத் தெரிவித்தார்.

"நூற்றாண்டு விழாக் குழுவில் பண்டித நேருவும் ஒரு உறுப்பினரல்லவா? தமிழ்நாட்டைப் பொறுத்த படம் ஒன்று எடுக்க இம்மாநில அரசாங்கம் டெல்லியை வற்புறுத்துமா?"

என்று தோழர் க. அன்பழகன் கேட்டார்.

"ஆலோசித்து, அவசியமானால் செய்யப்படும்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

நுங்கம்பாக்கம் வள்ளுவர் படிப்பக பணிமனை திறப்பு விழா

17—11—57 காலை 7 மணிக்கு சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் படிப்பகத்தின் பணிமனை திறப்பு விழா, கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் தோழர் இரா. சம்பந்தம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., வ. ச. தி. சு. கிள்ளிவளவன், மா. செங்குட்டுவன், இரகுநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

'உயரும் உழைப்பாளி'

'பகுத்தறிவு' ஆசிரியர் தோழர் ப. கண்ணன் அவர்கள் தீட்டிய 'உயரும் உழைப்பாளி' என்னும் நாடகம் 18—11—57 இரவு 9-15 முதல் 10 மணி வரை திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்படும்.

தமிழ் நாடு மருத்துவர் மத்திய சங்கச் செயற்குழுக் கூட்டம்

19—11—57ல், சென்னை தங்கசாலைத் தெரு, 330 எண்ணுள்ள கோவிந்தபவனம் சத்திரத்தில், தமிழ் நாடு மருத்துவர் மத்திய சங்கச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

17—11—57காலை 10 மணிக்கு சென்னை—11-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் (4/48, பிராட்வே) தோழர் அ. செழியன் தலைமையில் 'சமுதாயமும் சட்டமும்' என்னும் பொருள் குறித்துப் பலர் பேசுவர்.

வாழ்க்கை ஒப்பந்த அழைப்பு

அன்புடையீர்!

22-11-57 வெள்ளி காலை 7-மணிக்குமேல், மறைந்த மாவீரர் கே. வி. கே. சாமி அவர்களின் தமையனாரான எனது மகள் திருநிறைச் செல்வி பொன்னுத்தாய்க்கும், தூத்துக்குடி கொண்டக்கார மகாலிங்கம் அவர்களின் மதனியார் மகன் திருநிறைச் செல்வன் சு. முத்துசாமிக்கும் தூத்துக்குடி கான்வேண்ட் ரோடு, 36-வது எண்ணுள்ள மணமகன் இல்லத்தில் நடைபெறும் வாழ்க்கை ஒப்பந்த விழாவுக்கு அனைவரும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தும்படி வேண்டுகிறேன்.

அன்பன்,

கே. வி. தங்கையா

(கே. வி. கே. சாமியின் தமையன்)

குறிப்பு:—கழகத் தோழர்களும் குறிப்பாக நெல்லை மாவட்டக் கிளைக் கழகங்களும் மேற் கண்ட திருமணத்தில் கலந்து கொண்டு வாழ்த்துரை—அன்பளிப்பு ஆகியவைகளை அளித்து சாமி அவர்களின் குடும்பத்தினரைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

'அறிவகம்' சென்னை 16-11-57 } தலைமைக் கழகம், (தி. மு. க.)

சென்னை—நுங்கம்பாக்கம் சமூக ஊழியர் மன்ற ஆண்டு விழா

அண்ணா கலந்து கொள்வார்

17—11—57மாலை 5½ மணிக்கு சென்னை-நுங்கம்பாக்கம் நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி (லேக் ஏரியா) அருகில் தோழர் இரா. சம்பந்தம் தலைமையில், சமூக ஊழியர் மன்ற மூன்றாம் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். அண்ணா, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ., தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., தோழர்கள் வ. சங்கரநாராயணன், தி. சு. கிள்ளிவளவன், க. முருகேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். சேலம்-சீனிவாசன் இன்னிசை வழங்குவார்.

கழகக் கூட்டங்கள்

★

கள்ளக்குறிச்சி:
வள்ளுவர் திடலில்
17—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஜே. எச். பகதூர்
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
மு. பாண்டியன்
மா. தங்கவேலன்

★

காளையார்கோவில்:
18—11—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: மு. சேகரன்
பேசுவோர்:
என். எஸ். இளங்கோ
வீ. வீரப்பன்

★

சென்னை 16-வதுவட்டம்
பெருமாள்கோவில் தோட்டத் தெருவில்
(ஆனைகவுனி அருகில்)
18—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம். ஆர். கண்ணன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ஆர். ஜார்ஜ்
பே. த. இன்மொழி

★

வல்லம்:
(தஞ்சை மாவட்டம்)
மாரியம்மன்கோவில் திடலில்
18—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: கோ. செல்வராசு
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
எஸ். இரங்கசாமி

★

சென்னை-17வது வட்டம்:
சூளை, ஆவடி சீனிவாசய்யர் தெருவில்
18—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: மு. கன்னியப்பன்
பேசுவோர்:
கி. மனோகரன்
சத்தியவாணிமுத்துஎம்.எல்.ஏ
ஆர். ஜார்ஜ்

ஒத்திவைப்பு

17—11—57-ல் சிதம்பரத்தில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டம், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் வர இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால், 8-12-57-க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது.

பி. வி. கோட்டச்சாமி

மறைவு

மதுரை, நவ. 15—

நமது கழக அனுதாபியும், தேர்தல் காலத்தில் உத்தமபாளையம் தொகுதியில் நமது கழக ஆதரவு பெற்று போட்டியிட்ட திரு.பி.டி. இராசன் அவர்களுக்கு ஆதரவாகத் தீவிரமாக உழைத்தவருமான திரு. பி. வி. கோட்டச்சாமி (தேவர்) அவர்கள், கார் விபத்துக்குள்ளாகி நேற்று மரணமடைந்தார் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. கோட்டச்சாமி (தேவர்) கூடலூர் ஊராண்மைக் கழகத் தலைவராவார்.

அகால மரணமடைந்த அன்னாரின் குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினருக்கும் கூடலூர் தி. மு. கழகத் தோழர்கள் தங்களின் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

விற்பனை வரி விசாரணைக் குழு அறிக்கை

சென்னை, நவ. 15—

"விற்பனை வரி விதிப்பு முறையை மாற்றியும், திருத்தியும் அமைப்பதற்கான ஆக்க யோசனைகளை அறிவிக்க நியமிக்கப்பட்ட டாக்டர் லோகநாதன் குழு அறிக்கையைத் தயாரித்து அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளது" என்று, தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.